மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 327/2012

பெயர் : ராம்
சாட்சி – பி.வா.சா–3 நாள்: 23.07.2026

---

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பு)**

1. 1ம் பிரதிவாதி வீராசாமி எனக்கு 30 வருடங்களாக பழக்கம் என்றால் ஆம். நான் 5ம் பிரதிவாதிக்கு மொத்தமாக 86 லட்சம் கொடுத்துள்ளேன். அதனை ஒரே நாளில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வாங்கிய தொகையை கொடுத்துவிட்டாரா என்றால் கொடுத்துவிட்டார். எவ்வளவு நாளில் கொடுத்தார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. ஜனா பைனான்சில் கடன் வாங்கி கொடுத்தாரா என்றால் ஜனா பைனான்சில் வாங்கி கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. ஆனால், சில காலம் கழித்து கொடுத்துவிட்டார்.

2. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தின் படி என்னிடம் கடன் வாங்கிய 15.06.2017 தேதிக்கு மறுநாள் 16.06.2017 தேதியிலேயே எனக்கு 30 லட்சம் வங்கி மூலம் திரும்ப அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். ஜனா பைனான்சில் லதா கடன் வாங்கியது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. லதாவின் ஸ்ரீ லட்சுமி நாராயணா பேக்ஸ் நிறுவனத்தின் வங்கி கணக்கு மகாராஷ்டிரா வங்கியில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு பட்டியல் லதாவின் ஸ்ரீ லட்சுமி நாராயணா பேக்ஸ் நிறுவனத்தின் மகாராஷ்டிரா வங்கி கணக்கு பட்டியலின் 15.06.2017 மற்றும் 16.06.2017 தேதிகளுக்குரிய கணக்கு பட்டியல் என்றால் சரிதான். **(ஸ்ரீ லட்சுமி நாராயணா பேக்ஸ் நிறுவனத்தின் மகாராஷ்டிரா வங்கி கணக்கு பட்டியல் வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. வா.சா.ஆ.21 கணக்கு பட்டியலின் படி 1ம் பிரதிவாதியான எனது நண்பர் வீராசாமி லதாவின் நிறுவனத்திற்கு 16.06.2017 தேதியில் ரூ.67 லட்சம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வீராசாமி ரூ.67 லட்சம் கொடுத்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், அதனை தெரிந்தே எனது முதல் விசாரணையில் ஜனா

பைனான்சில் கடன் வாங்கி கொடுத்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லிவிட்டேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

KALIDASAN VEERASAMY

Digitally signed by KALIDASAN VEERASAMY
Date: 2026.07.23 18:13:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.